THE HON. SRI P. KAKKAN : தண்ணீர் இல்லாமல் கஷ்டப் படும் இடங்களுக்கு ஒத்தாசை செய்யவேண்டும் என்ற நோக்கத் துடன்தான் இந்தத் திட்டத்தை எடுத்துக்கொண்டிருக்கிறோம். கனம் அங்கத்தினர்கள் குறிப்பிடுகிற திட்டங்களைப் பற்றியுள்ள விவரங்களை கொடுப்பதற்கு தனிக்கேள்வி வேண்டும்.

(ஸ்ரீ ஜி. ஜி. குருமூர்த்தி எழுந்தார்.)

MR. SPEAKER : மூலக் கேள்வி கேட்டிருப்பவருக்குத்தான் ஒன்றுக்குமேல் உபகேள்வி கேட்க சந்தர்ப்பம் கொடுக்கமுடியும். தங்களை எப்படி அடிக்கடி உபகேள்வி கேட்க அனுமதிக்க முடியும்? வேண்டுமென்றால் நீங்களும் அதைப்பற்றி ஒரு கேள்வி அனுப்புங்கள்.

SRI P. G. MANICKAM : முன்னால் சொன்ன நீர் கசிவை பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் இதற்காக நான்கு திட்டங்கள் 1960-ல் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது என்றும் முன்னால் தெரிவிக்கப்பட்டது, இப்போது கொண்டுவரப்பட்டிருக்கும் காளிங்கராயன் வாய்க்கால் திட்டம் இதற்கு தடையாய் இருப்ப தாக தெரிகிறது, ஆகவே இதை இன்னும் பரிசிலனை செய்து பார்த்து முன்னால் போட்ட திட்டங்களை நிறைவேற்றுவதற்கு சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் அவர்கள் இதற்கு தனியாக கேள்வி போடலாம்.

Lift Irrigation

* 478 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal to increase the number of Lift Irrigation Schemes; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) Yes, Sir. A statement [a] showing the new scheme proposed, is placed on the table of the House.

SRI N. K. PALANISAMI : கன்யாகுமரி ஜில்லாவில் ஒரே ஒரு இடத்தில்தான் 'லிப்ட் இர்ரிகேஷன்' இருக்கிறது. தாழ்வான இடத்திலிருந்து தண்ணீரை உயர்வான இடத்திற்கு கொண்டு போகும் திட்டம் ஒன்றே ஒன்றுதான் இருக்கிறது. நூற்றுக் கணக்கான ஏக்கருக்குப் பாயக்கூடிய திட்டம் அது. நம் மாகா ணத்தில் அம்மாதிரி பல இடங்களில் திட்டம் கொண்டுவர முடியும். அம்மாதிரி திட்டங்களை எந்த எந்த இடத்தில் வைக்க முடியும் என்று பரிசீலனை சர்க்கார் முயற்சிக்குமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : முதலில் கேட்ட கேள்விக்கு விடை அளித்திருக்கிறேன். அதற்குமேல் விவரங்கள் என்னிடம் ஒன்றும் இல்லை.

---

a Printed as Appendix II on page 220 infra.

SRI A. VEDARATHNAM : மேஜைமீது வைக்கப்பட்டிருக்கும் அறிக்கையில் ஐந்தாவது ஐட்டத்தில் உள்ள மானங்கொண்டனூறு பம்பிங் ஸ்கிம், தென்னடியார் பம்பிங் ஸ்கிமுக்கு முந்தி ஆரம்பிக் கப்பட்டது. அதற்காக லட்ச ரூபாய் அரசாங்கம் செலவு செய்தி ருக்கிறது. ஐந்து இடத்தில் ஐந்து பம்பிங் ஸ்கிம் ஏற்படுத்தி, ஒவ்வொரு இடத்திலும் 100 ஏக்கருக்கு அதிகமாகப் பாசனத் திற்குத் திட்டமிட்டிருந்துங்கூட காத்திருக்கவேண்டிய அவசியம் என்ன இருக்கிறது? நூறு, இருநூறு ஏக்கருக்காவது பாசனம் கொடுக்க முன்வரக்கூடாதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இரண்டு, மூன்று திட்டங்களை நிறைவேற்றும்போது தண்ணீர் போதிய அளவு கிடைக்குமா என்பதுதான் முக்கியமாகப் பரிசிலிக்கவேண்டிய விஷயம். அதைப் பரிசிலனை செய்வதிலேதான் கொஞ்சம் தாமதம் ஏற்படுகிறது.

Air-port (Vellore)

* 479 *Q.*—SRI A. A. RASHEED : } Will the Hon. the
SRI P. SARATHI : }
Minister for Works be pleased to state—

(*a*) whether the Government have recommended to the Union Government for converting the landing ground at Vellore into a regular air-port; and

(*b*) if so, the reply received from them?

THE HON. SRI P. KAKKAN : (*a*) & (*b*) No Sir. But our information is that regrading and levelling of the strip is in progress and that further improvements to the strip and a small terminal building are provided for in the Third Plan.

SRI A. A. RASHEED : May I know whether Government have received mahajars from public of Vellore for converting the landing ground into an Air Port? If so what is the action taken by Government? Is the Hon. Minister aware of the fact that the present landing ground remains unused for a long number of years?

THE HON. SRI P. KAKKAN : I have no facts with me now whether we have received any petition or not. The Indian Airlines Corporation have not shown any interest for an aerodome for Vellore. The Director-General has added that if at any time the Indian Airlines Corporation decides to operate air service at Vellore, the necessary facilities will be provided by that department.

SRI A. GOVINDASAMY : நெய்வேலி நிலக்கரி திட்டத்தை உத்தேசித்து அதன் அருகே ஏற்கனவே இருந்த உளுந்தூர் பேட்டை விமான நிலயத்தை மீண்டும் கொண்டுவர அரசாங்கம் ஆலோசிக்குமா?

MR. SPEAKER : மூலக் கேள்வி வேலூரில் விமான நிலையம் ஏற்படுத்துவதைப் பற்றியது. கனம் அங்கத்தினர் ஸ்ரீ கோவிந்த சாமி அவர்கள் நெய்வேலிக்கு அருகில் விமான நிலையம் ஒன்று